# முக்கிய அறிவிப்பு

## சேமிப்பு வங்கிக் கணக்குகளில் வட்டி கொடுப்பது குறித்த கணக்கீட்டிற்கான அடிப்படை

கோட்டக் மஹிந்திரா வங்கி வாடிக்கையாளர்களுக்கு இதன் மூலம் தகவல் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், ஏப்ரல் 24, 2009 தேதியிட்ட இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) சுற்றறிக்கை எண். DBOD.No.Dir.BC 128/13.3.00/2008-09 என்பதன்படி; சேமிப்பு வங்கிக் கணக்குகளில் வட்டி செலுத்துவது என்பது, ஏப்ரல் 1, 2010 அன்றையத் தேதியிலிருந்து, ஓர் அன்றாடத் திட்ட அடிப்படையில் கணக்கிடப்படும். சேமிப்பு வங்கி கணக்கில் வட்டி கொடுப்பதற்கான காலம் காலாண்டாக இருக்கும். இவ்வாறு சேமிப்பு வங்கி வட்டி தினசரி திட்டத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு, அது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30, செப்டம்பர் 30, டிசம்பர் 31 மற்றும் மார்ச் 31-ம் தேதிகளில் கொடுக்கப்படும்.

சேமிப்பு கணக்கிற்கு கிடைக்கும் வட்டி வீதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| கணக்கில் உள்ள இருப்பு | வட்டி வீதம் |
|---|---|
| ரூ. 50 லட்சத்திற்கும் குறைவான இருப்பிற்கு | ஆண்டுக்கு 3.00% |
| ரூ. 50 லட்சத்திற்கும் அதிகமான இருப்பிற்கு | ஆண்டுக்கு 3.50% |

**விளக்கம்:-**

நாளின் இறுதியில் கணக்கில் உள்ள இருப்பு = ரூ. 55,00,000

- ரூ. 50 லட்சத்திற்கும் குறைவாக அல்லது அதற்கு சமமான இருப்புகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வட்டி - ஆண்டுக்கு 3.00%
- ரூ. 50 லட்சக்கும் அதிகமான, மீதமுள்ள இருப்புகளுக்கு நிர்ணையிக்கப்பட்ட வட்டி - ஆண்டுக்கு 3.50%

ஒரு நாளுக்கு வழங்கப்படும் வட்டி கீழ்க் கண்டபடி கணக்கிடப்படும்:
(50,00,000 * 3.00% * 1/365) + ({55,00,000 – 50,00,000} * 3.50% * 1/365)

## பருவகால வைப்பு நிதிகளில் சம்பாதித்த வட்டியைக் கணக்கிடுவதற்கான அடிப்படை

| வைப்புநிதி வகைகள் | வட்டி கணக்கிடுவதற்கான அடிப்படை |
|---|---|
| உள்நாட்டு/ NRE/ NRO வைப்பு நிதிகள் | வைப்புநிதிக்கான நாட்களின் உண்மையான எண்ணிக்கை / உண்மையில் ஓர் ஆண்டில் உள்ள நாட்களின் எண்ணிக்கை* |
| FCNR வைப்புநிதிகள் | வைப்புநிதிக்கான நாட்களின் உண்மையான எண்ணிக்கை / 360 நாட்கள் |

*ஒரு லீப்-ஆண்டு அல்லாத ஆண்டில் செலுத்துகிற வைப்புத் தொகைகளுக்கு ஓர் ஆண்டில் உள்ள 365 நாட்கள் அடிப்படையிலும், ஒரு லீப் (காலண்டர்) ஆண்டில் செலுத்துகிற பருவகால வைப்புத் தொகைகளுக்கு ஓர் ஆண்டில் உள்ள 366 நாட்கள் அடிப்படையிலுமே வட்டி கணக்கிடப்படுகிறது.

KMBL/ Feb 2025 / V 1.13